## பத்திரிக்கை செய்தி

**புதிய குடும்ப அட்டை வழங்குவதற்கு பரிந்துரை செய்ய லஞ்சம் கேட்டு பெற்ற பொறிவைப்பு நடவடிக்கை வழக்கில் முன்னாள் சிறப்பு வருவாய் ஆய்வாளர் அவர்களுக்கு தண்டனை வழங்கி தீர்ப்பு**

புகார்தாரர் திரு.பச்சைமுத்து என்பவர் காரத்தூரப்பட்டி கிராமம், இலுப்பூர், புதுக்கோட்டை மாவட்டத்தில் வசித்து வந்தார். தனக்கு புதிதாக குடும்ப அட்டை வேண்டி இலுப்பூர் வட்ட வழங்கல் அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். திரு.சுப்பையா, முன்னாள் சிறப்பு வருவாய் ஆய்வாளர், இலுப்பூர், புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள் புகார்தாரரிடம் புதிய குடும்ப அட்டை வழங்குவதற்கு பரிந்துரை செய்ய தனக்கு ரூ.500/- லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, புதுக்கோட்டை பிரிவில் வழக்குபதிவு செய்யப்பட்டது. 28.07.2009 தேதியன்று பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது, அதில் எதிரி, புகார்தாரரிடம் லஞ்சப்பணம் ரூ.500/-யை கேட்டு பெற்றுக்கொண்ட போது கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் விசாரணை முடிவுற்று எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு புதுக்கோட்டை சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டு இன்று 16.03.2023 எதிரி திரு. சுப்பையாவுக்கு சட்டப்பிரிவு 7of PC Act-ன் 1988 கீழ் 5 வருட கடுங்காவல் தண்டனையுடன் ரூ.3,000/- அபராதமும், சட்டப்பிரிவு 13(2) & 13(1) (d) of PC Act-ன் கீழ் 5 வருட கடுங்காவல் தண்டனையுடன் ரூ.3,000/- அபராதமும் விதித்து தண்டணையை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## PRESS NOTE

### Formerly Special Revenue Inspector convicted in bribe case

The complainant Tr.Pachaimuthu is residing at Karathoorapatti Village, Illupur, Pudukottai District. He had applied new ration card at Illupur Taluk Supply Office, Pudukottai district. Tr.Subbiah, Special Revenue Inspector, Illupur Taluk Supply Office, Pudukottai district, had demanded Rs.500/- as bribe for processing his application. The complainant not willing to give bribe, preferred complaint with Vigilance and Anti– Corruption, Pudukottai Detachment. In this connection a trap was organized. On 28.07.2009 trap was laid against the accused and the accused was caught red-handed while demand and acceptance of bribe money Rs.500/- from the complainant. On completion of investigation, the case was charge sheeted against the accused. The case was trial before the Spl. Court for PC Act, Cases, Pudukottai. Today 16.03.2023 the Special Court pronounced the judgement against Tr.Subbiah, formerly Special Revenue Inspector convicted for 5 years Rigorous Imprisonment and with fine Rs.3,000/- u/s 7 and concurrently 5 years Rigorous Imprisonment and with fine Rs.3,000/- u/s.13(2) & 13(1)(d) of the Act. Both the sentences ordered to run concurrently.